## க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2015
## பொருளியல் I
## விடையளித்தலுக்கான வழிகாட்டல்

| வினா இலக்கம் | விடை | வினா இலக்கம் | விடை |
|---|---|---|---|
| (1) | 3 | (26) | 3 |
| (2) | 2 | (27) | 3 |
| (3) | 4 | (28) | 3 |
| (4) | 2 | (29) | 1 |
| (5) | 5 | (30) | 3 |
| (6) | 5 | (31) | 3 |
| (7) | 4 | (32) | 5 |
| (8) | 2 | (33) | 5 |
| (9) | 4 | (34) | 3 |
| (10) | 5 | (35) | 4 |
| (11) | 1 | (36) | 5 |
| (12) | 4 | (37) | 4 |
| (13) | 5 | (38) | 5 |
| (14) | 5 | (39) | 2 |
| (15) | 1 | (40) | 4 |
| (16) | 2 | (41) | 1 |
| (17) | 1 | (42) | 2 |
| (18) | 2 | (43) | 1 |
| (19) | 3 | (44) | 3 |
| (20) | 5 | (45) | 4 |
| (21) | 3 | (46) | 2 |
| (22) | 2 | (47) | 1 |
| (23) | 4 | (48) | 3 |
| (24) | 2 | (49) | 1 |
| (25) | 2 | (50) | 2 |

The National e-learning Portal for The General Education

[2 වන පිටුව බලන්න

## பொருளியல் - பகுதி II
## விடைக்கான வழிகாட்டல்

1. (i) வரையறைக்குட்பட்ட வழங்கல் காணப்படும் வளங்கள் அல்லது பற்றாக்குறையான வளங்கள் பொருளாதார வளங்கள் எனப்படும்.
பொருளாதாரம் வளமானது பற்றாக்குறையாக காணப்படுவதால் அவற்றுக்கு அமையச் செலவு ஒன்று ஏற்படும்.

**(01 புள்ளி)**

உ-ம் : பயிர் செய்யக்கூடிய நிலம், ஊழியம், இயந்திர உபகரணங்கள், முயற்சியாண்மை ஆற்றல்.

**(01 புள்ளி)**

பூச்சிய விலையில் கூட வரையறையற்ற வழங்கல் காணப்படுபவை பொருளாதாரமல்லாத வளம் எனப்படலாம். பொருளாதாரமல்லா வளப் பாவனையின் போது அமையச் செலவு பூச்சியமாகும்.

**(01 புள்ளி)**

உ-ம் : பிடவை உலர்த்தப் பயன்படுத்தப்படும் சூரிய ஒளி
தென்மேல் பருவக்காற்று **(01 புள்ளி)**

(ii)

| பொருளாதார முறைமையின் இயல்பு | வள உரிமையின் இயல்பு |
|---|---|
| 1. முதலாளித்துவப் பொருளாதார முறை | சொத்துரிமை தனியார் துறையிடம் காணப்படும். |
| 2. சமவுடமைப் பொருளாதார முறை | சொத்துரிமை அரசதுறையிடம் காணப்படும். |
| 3. கலப்புப் பொருளாதார முறை | அரச துறை, தனியார் துறை ஆகிய இரு துறைகளிடமும் சொத்துரிமை காணப்படும். |
| 4. பாரம்பரியப் பொருளாதார முறை | சமூகத்தில் உள்ள நபர்களால் பொது உரிமையின் கீழ் வளங்கள் பயன்படுத்தப்படும். |

The National e-learning Portal for The General Education


(iii) சந்தைப் பொருளாதாரத்தில் விலைப்பொறிமுறையானது 03 தொழிற்பாடுகளைப் புரிகின்றது.

1. சமிக்ஞை வழங்கல்
2. ஊக்குவிப்பு வழங்கல்
3. பங்கீட்டுத் தொழிற்பாடு

மாற்றுப்பயன்பாட்டிடையே வளப்பகிர்வின்போது விலைப்பொறிமுறையின் தொழிற்பாடு என்பதன் மூலம் கருதப்படுவது விலையை அடிப்படையாகக் கொண்டு எதனை, எந்தளவு உற்பத்தி செய்வது? என்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதாகும்.

எதனை, எந்தளவு உற்பத்தி செய்வது என்ற பிரச்சினைக்கு விலைமூலம் தீர்வு காண்பது சார்பு ரீதியாக கூடிய இலாபத்தைத் தரக்கூடிய பண்டங்களை உற்பத்தி செய்ய வழங்களை ஒதுக்குவதன் மூலமாகும்.

(iv) குறிப்பிட்ட ஒரு பொருளாதாரத்தில் வளங்கள் பூரணமாகப் பயன்படுத்தப்படாத நிலை காணப்பட்டால் அவ்வளங்களை அமையச் செலவின்றி உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுத்தலாம்.





**(04 புள்ளிகள்)**

[பக். 3 ஐப் பார்க்க

D புள்ளியில் குறைவளப்பயன்பாடு காண்பபடுகின்றது. எனவே அமையச் செலவின்றி உணவு உற்பத்தியை மாத்திரம் அதிகரித்து A புள்ளி வரையும் ஆடை உற்பத்தியை மாத்திரம் அதிகரித்து C புள்ளி வரையும் உணவு, ஆடை ஆகிய இரு பண்டங்களினதும் உற்பத்திகளை அதிகரித்து B புள்ளி வரையிலும் உற்பத்தியை மேற்கொள்ளலாம். **(02 புள்ளிகள்)**

குறிப்பிட்ட ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தியில் வினைத்திறன் காணப்பட்டால், அதாவது உற்பத்திச் சாத்திய எல்லையில் பண்ட உற்பத்தியை மேற்கொண்டால் அமையச் செலவு இன்றி வளப்பயன்பாட்டை மாற்ற முடியாது.




பொருளாதாரத்தில் A புள்ளியில் உற்பத்தியில் ஈடுபட்டு ஆடை உற்பத்திக்கான வளப்பயன்பாட்டை அதிகரித்தால் உணவு உற்பத்தியைத் தியாகம் செய்ய வேண்டி ஏற்படும். B புள்ளியில் உற்பத்தியில் ஈடுபட்டு உணவு உற்பத்திக்கு வளங்களை அதிகரித்தால் ஆடை உற்பத்தியை தியாகம் செய்தல் வேண்டும். எனவே உற்பத்தி சாத்திய எல்லை வளையியில் உற்பத்தி மேற்கொள்ளும் போது வளப்பயன்பாட்டை மாற்றியமைத்தால் அமையச் செலவு ஏற்படும்.

(v) இக்கூற்று உண்மையன்று.
பொருளாதார வினைத்திறனை ஏற்படுத்த வேண்டுமாயின் உற்பத்தியின் வினைத்திறன், வளபயன்பாட்டின் வினைத்திறன் ஆகிய இரண்டு நிபந்தனையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.
உற்பத்தியின் விளைதிறன் ஏற்பட கொடுக்கப்பட்ட வளங்களின் அளவினால் கிடைக்கும் வெளியீடு உச்சமடைய அல்லது கொடுக்கப்பட்ட வெளியீட்டினைப் பெற்றுக்கொள்ள தேவையான வளங்களின் அளவு குறைதல் நிகழவேண்டும்.

உற்பத்தியின் வினைத்திறனைப் பெற்றுக்கொள்ள இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
1. நிறை தொழில் மட்டம்
2. நிறை உற்பத்தி

வளப்பகிர்வின் வினைத்திறன் என்பது பொதுமக்கள் மிகவும் முன்னுரிமை வழங்கும் பண்டங்கள் உற்பத்தி செய்வதற்காக வளங்களை ஒதுக்குவதாகும். அதாவது சமூக முன்னுரிமை அடிப்படையில் உற்பத்தியைத் தீர்மானிப்பதாகும்.

வளப்பகிர்வின் வினைத்திறன் ஏற்பட வேண்டுமாயின் பண்ட அலகின் விலை அதன் எல்லைச் செலவிற்குச் சமப்படல் வேண்டும். (P=MC)

- இதன்படி பொருளாதாரத்தின் வினைத்திறனானது உற்பத்தியின் வினைத்திறனிலும் வளப்பகிர்வின் வினைத்திறனிலும் தங்கியுள்ளது. **(04 புள்ளிகள்)**


2. (i) • தனியார் கேள்வி என்பது சந்தையில் உள்ள ஒரு நுகர்வோனினால் கவனத்தில் கொள்ளப்படும் பண்டம் தொடர்பாக மாற்று விலைகளின் கீழ் கேள்வி எழுப்ப எதிர்பார்க்கும் அளவாகும்.

• சந்தைக் கேள்வி என்பது, கவனத்திற் கொள்ளப்படும் பண்டத்திற்கு சந்தையில் உள்ள எல்லா நுகர்வோரினதும் தனிப்பட்ட கேள்வி அளவின் மொத்தமாகும். **(02 புள்ளிகள்)**

(ii) கேள்வித் தொகையானது அப்பண்டத்தின் விலையின் எதிர்கணிய சார்பாக அமைவது இரு காரணிகளால் ஆகும்.

- ★ பதிலீட்டு விளைவு
- ★ வருமான விளைவு **(02 புள்ளிகள்)**

(iii)




ரூ. 0 இல் ped $= \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{Q} = \frac{20}{10} \times \frac{0}{40} = 0$

ரூ. 10 இல் ped $= \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{Q} = \frac{20}{10} \times \frac{10}{20} = 1$

ரூ. 20 இல் ped $= \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{Q} = \frac{20}{10} \times \frac{20}{0} = \alpha$

வரைபடம் **(02 புள்ளிகள்)**

- கேள்விக் கோட்டில் நெகிழ்வுள்ள கேள்வியின் போது விலை வீழ்ச்சியடைதல் விற்பனையாளர் வருமானம் அதிகரிக்கக் காரணமாகும்.
- கேள்விக் கோட்டின் அலகு நெகிழ்ச்சிப் புள்ளியில் விற்பனையாளர் வருமானம் உச்சப்படுத்தப்படும்.
- கேள்விக் கோட்டில் நெகிழ்ச்சியற்ற பிரதேசத்தில் விலை வீழ்ச்சியடையும் போது விற்பனையாளர் வருமானம் வீழ்ச்சியடைக் காரணமாகும். **(02 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

(iv) பல்வேறு வகையான பண்டங்களின் விலையின் நிரம்பல் நெகிழ்ச்சி 1 ஐ விடக் குறைவாகவோ அல்லது 1ஐ விடக் கூடுதலாகவோ இருக்க முடியும். பின்வரும் காரணிகளால் இந்நிலை ஏற்படலாம்

- குறித்த பண்டத்திற்கு மேலதிக இருப்பைச் சேகரிக்க முடிகின்றமை.
- குறித்த பண்டத்தின் உற்பத்தித் தொழிற்பாட்டின் போது காரணி அசைவை ஏற்படுத்தும் ஆற்றல்.
- குறித்த பண்டத்தின் விலை மாற்றத்தின் பின் கடந்துள்ள காலம்
- குறித்த பண்ட உற்பத்தித் தொழிற்பாட்டின் கொள்ளளவுப் பயன்பாட்டின் அளவு **(04 புள்ளிகள்)**

(v) (අ)

$Qd = a - bP$

$b = \frac{\Delta Qd}{\Delta P} = \frac{20}{4} = 5$

$Qd = a - 5P$

$100 = a - 5(20)$

$100 = a - 100$

$200 = a$

$Qd = 200 - 5P$

**(01 புள்ளி)**

$Qs = a + bP$

$b = \frac{\Delta Qs}{\Delta P} = \frac{20}{4} = 5$

$Qs = a + 5P$

$60 = a + 5(20)$

$60 = a + 100$

$60 - 100 = a$

$-40 = a$

$Qs = -40 + 5P$

**(01 புள்ளி)**

[பக். 5 ஐப் பார்க்க

(ஆ)

$$Qd = Qs$$
$$200 - 5P = -40 + 5P$$
$$200 + 40 = 5P + 5P$$
$$240 = 10P$$
$$24 = P$$

**(01 புள்ளி)**

$$Qd = 200 - 5P$$
$$Qd = 200 - 5(24)$$
$$Qd = 200 - 120$$
$$Qs = 80$$ அல்லது

$$Qs = -40 + 5P$$
$$Qs = -40 + 5(24)$$
$$Qs = -40 + 120$$
$$Qs = 80$$

**(01 புள்ளி)**

(இ) மானியத்தின் பின் நிரம்பல் சமன்பாடு

$$Qs_1 = -40 + 5(P + 10)$$
$$Qs_1 = -40 + 5P + 50$$
$$Qs_1 = 10 + 5P$$

அல்லது

$$Qd = Qs$$
$$200 - 5P_b = -40 + 5P_s$$
$$200 - 5P_b = -40 + 5(P_b + 10)$$
$$200 - 5P_b = -40 + 5P_b + 50$$
$$200 - 5P_b = 10 + 5P_b$$
$$190 = 10P_b$$
$$\underline{\underline{19 = P_b}}$$

மானியத்தின் பின் விலை

$$Qd = Qs_1$$
$$200 - 5P = 10 + 5P$$
$$190 = 10P$$
$$19 = P$$

மானியத்தின் பின் சமநிலைத் தொகை

$$Qd = 200 - 5P$$
$$Qd = 200 - 5(19)$$
$$Qd = 200 - 95$$
$$Qd = 105$$

**(02 புள்ளிகள்)**

மானியத்தால் அரசுக்கு ஏற்படும் செலவு $= 10 \times 105 = 1050$

நுகர்வோர் மிகை மாற்றமடைதல்

மானியத்தின் முன் நுகர்வோன் மிகை $= 24 \times 80 = 1920$

மானியத்தின் நுகர்வோன் மிகை $= 19 \times 105 = 1995$

நுகர்வோர் மிகை (1995 - 1920) $= 75$ ரூபாவால் அதிகரிக்கும் **(02 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

3. (i) மொத்த வருமானம் – (நேர் செலவு) = கணக்கியல் இலாபம் **(02 புள்ளிகள்)**

மொத்தச் வருமானம் – மொத்த அமையச் செலவு (நேர் செலவு + நேரில் செலவு) = பொருளாதாரம் இலாபம்.

**(02 புள்ளிகள்)**

சாதாரண இலாபம் : முயற்சியாளன் தனது முயற்சி நடவடிக்கையின் மூலம் எதிர்பார்க்கும் குறைந்தபட்ச உழைப்பாகும்.

**(02 புள்ளிகள்)**

- கணக்கியல் இலாபத்தின் போது அமயச்செலவு கவனத்தில எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
- பொருளாதார இலாபத்தின் போது அமயச்செலவு கவனத்திலகொள்ளப்படுவதால் கணக்கியல் இலாபத்தினை விட பொருளியல் இலாபம் குறையும.
- சாதாரண இலாபத்தில் TR > TC ஆகும்போது பொருளியல் இலாபம் கிடைக்கும்

(ii) குறுங்காலத்தில் நிலையான உள்ளீடுகளை மாற்றாமல் மாறும் உள்ளீடுகளை மாத்திரம் மாற்றுவதன் மூலம் உற்பத்தியில் ஈடுபடும்போது குறிப்பிட்ட ஒரு நிலைக்கு அப்பால் மாறும் உள்ளீடுகளின் சராசரி உற்பத்தியும் எல்லை உற்பத்தியும் வீழ்ச்சியடைவதை குறையும் எல்லை விளைவு விதி விளக்குகின்றது. குறுங்காலத்தில் உற்பத்தித் தொழிற்பாட்டில் எல்லை விளைவு குறைவதால் எல்லைச் செலவு அதிகரிக்கும். அளவுத்திட்ட விளைவு விதி நீண்டகால உற்பத்தித் தொழிற்பாட்டை விளக்குகின்றது. இங்கு எல்லா உள்ளீடுகளின் அளவையும் குறிப்பிட்ட ஒரு விகிதாசாரத்தினால் அதிகரிக்கும்போது அதைவிடக் குறைந்த வீதத்தில் வெளியீட்டில் அதிகரிப்பு ஏற்படும் நிலையை குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி காட்டும். எனவே நீண்டகால சராசரிச் செலவு அதிகரிக்கும்.


அளவுத்திட்ட விளைவு விதியானது நீண்டகால உற்பத்திச் செயற்பாட்டுடன் தொடர்புடைய சகல உள்ளீடுகளும் (அளவு) வேறுபடும்போது வெளியீடு இயங்கும் முறையை விளக்குகின்றது. குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி மூலம் சகல உள்ளீடுகளையும் கூட்டும் விகிதாசாரத்தை விட குறைந்த விகிதாசாரத்தில் வெளியீடு அதிகரிக்கும் என்பது விளக்கப்படகின்றது.
குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு காணப்படும்போது நீண்டகால சராசரிச் செலவு அதிகரிக்கும். **(04 புள்ளிகள்)**

(iii) நீண்ட காலத்தில் ஒரு உற்பத்தி நிறுவனம் உற்பத்தியை அதிகரிக்கும்போது நிறுவனத்தில் அலகுக்கான செலவு குறைவதால் ஏற்படும் சாதகமான நிலை அளவுத்திட்ட சிக்கனம் எனப்படும். இவ்வளவுத்திட்ட சிக்கனமானது ஏற்படுவது,

(அ) தொழினுட்பச் சிக்கனம்
(ஆ) சந்தைப்படுத்தல் சிக்கனம்
(இ) முகாமைத்துவச் சிக்கனம்
(ஈ) நிதிச் சிக்கனம்
(உ) இடர் ஏற்றல் தொடர்பான சிக்கனம் என்பவற்றினாலாகும். **(04 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

(iv) • சராசரி மாறும் செலவு (AVC) வீழ்ச்சியடையும் நிலையில் காணப்படும் விலை குறைந்தபட்ச நிரம்பல் விலையாகும். வரைபடத்தில் இதற்கு P 1 உதாரணமாகும் .




(v) • எண்ணற்ற கொள்வனவாளரும் விற்பனையாளரும் காணப்படும்.
- பிரவேசச் சுதந்திரம் காணப்படல். உள் நுழையவும் வெளியேறவும்
- ஓரினத்தன்மை வாய்ந்த பண்ட உற்பத்தி **(02 புள்ளிகள்)**

[பக். 7 ஐப் பார்க்க

4. (i) (அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (ச.வி) = உள்நாட்டு சேமிப்பு + மொத்த நுகர்வு

$S_D + (C + G)$

= 1200 மி.ரூபா. **(02 புள்ளிகள்)**

(ஆ) தேறிய உள்நாட்டு வருமானம் = வாடகை+ சம்பளம் + வட்டி + கம்பனி இலாபம்

= 250 + 400 + 150 + 150

= 950 மி.ரூபா. **(02 புள்ளிகள்)**

(இ) மூலதனத் தேய்வு = மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேறிய மொத்த உள்நாட்டு உற்பத்தி

= 1200 – (950 + 150)

= 100 மி.ரூபா. **(02 புள்ளிகள்)**

(ii)
- நிச்சயமாக சமனாகாது.
- எனினும் சமனாகக் கூடிய நிலைமைகள் காணப்படலாம்.
  - (அ) வெளிநாட்டு வர்த்தகம் இடம்பெறாத நாடாக இருத்தல்.
  - (ஆ) ஏற்றுமதிப் பெறுவனவுகளும் இறக்குமதிக் கொடுப்பனவுகளும் சமனாகக் காணப்பட்டால்
- ஏற்றுமதி இறக்குமதிப் பெறுமதிகள் சமனற்றுக் காணப்படும்போது மொத்த உள்நாட்டுச் செலவுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையே வித்தியாசம் ஏற்படும். $X > M$ ஆகும்போது மொத்த உள்நாட்டுச் செலவு < மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.
  $X < M$ ஆகக் காணப்பட்டால் மொத்த உள்நாட்டுச் செலவு > மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

**(04 புள்ளிகள்)**

(iii) தரவுகளைப் பெற முடியாத அல்லது பெறுமதிகளைத் தெளிவாகக் கணக்கிட முடியாதபோது சில வளைதிறனுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தேசிய கணக்கீட்டிலிருந்து விடுபடுகின்றது. விசேடமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இது முக்கிய இடம் பெறுகின்றது. அவ்வாறான விடயங்கள்

- ⋆ பெண்களின் நடவடிக்கைகள்
- ⋆ பிழைப்பூதிய பொருளாதார நடவடிக்கைகள்
- ⋆ முறைசாராத பொருளாதார நடவடிக்கைகள்
- ⋆ மறைந்த நிலையில் உள்ள பொருளாதார நடவடிக்கைகள்
- ⋆ அறிக்கைப்படுத்தப்படாத பொருளாதார நடவடிக்கைகள் **(04 புள்ளிகள்)**

(iv)
- பொருளாதார வளர்ச்சியைக் கணிப்பிடல்
- பொருளாதாரத்தின் செயலாற்றுகையைக் கணிக்கலாம்
- பொருளாதாரக் கட்டமைப்பையும் கட்டமைப்பு மாற்றத்தையும் விமர்சிக்கலாம்.
- வளங்களையும் வளப் பாவனையையும் இனங் காணலாம்.
- சர்வதேசத்தோடு ஒப்பிடுவதற்கு
- வினைத்திறனுள்ள வருமானக் கட்டமைப்பை விமர்சிக்க
- பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க. **(04 புள்ளிகள்)**

(v)
- வாடகை
- சம்பளம்
- வட்டி
- கம்பனி இலாபம்
- தேய்வு
- தேறிய நேரில்வரி (சந்தை விலையாயின்) **(02 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

[பக். 8 ஐப் பார்க்க

5. (i) எளிய பொருளாதாரத்தில் செலவிடத்தக்க வருமானத்தை இரு முக்கிய காரணிகளுக்காகப் பயன்படுத்தலாம். அதாவது, நுகர்வும் சேமிப்புமாகும்.
செலவிடக் கூடிய வருமானத்தில் ஒரு பகுதி சேமிப்புக்காகப் பயன்படுத்தினால் எல்லை நுகர்வு நாட்டம் 1 ஐ விடக் குறைந்த பெறுமதியைப் பெறும்.

**(02 புள்ளிகள்)**

(ii) 1) தனியார் நுகர்வுச் செலவு அதிகரித்தல்
2) முதலீட்டுச் செலவு அதிகரித்தல்
3) அரச செலவு அதிகரித்தல்
4) தேறிய ஏற்றுமதி அதிகரித்தல்
5) சுதந்திரமான வரி குறைவடைதல்
6) சுதந்திரமான இறக்குமதி வீழ்ச்சியடைதல்

(iii) (அ)

$$c = a + b\,\mathrm{Yd}$$

$$b = \frac{\Delta C}{\Delta \mathrm{Yd}} = \frac{1500}{2000} = 0.75$$

$$C = a + 0.75\ \mathrm{Yd}$$

$$1250 = a + 0.75 \times 1000$$

$$1250 = a$$

$$C = 500 + 0.75\ \mathrm{Yd}$$

**(02 புள்ளிகள்)**

(ஆ)

$$\mathrm{Y = C + I + G}$$

$$\mathrm{Y = 500 + 0.75\ Yd + 300 + 100}$$

$$\mathrm{Y = 900 + 0.75\ (Y - T)}$$

$$\mathrm{Y = 900 + 0.75\ (Y - 100)}$$

$$\mathrm{Y = 900 + 0.75Y - 75}$$

$$\mathrm{Y = 825 + 0.75\ Y}$$

$$\mathrm{0.25\ Y = 825}$$

$$\mathrm{Y = 3300}$$

**(02 புள்ளிகள்)**

(இ)

$$\mathrm{W = J}$$

$$\mathrm{S + T = I + G}$$

$$300 + 100 = 300 + 100$$

$$400 = 400$$

$$\mathrm{S = -500 + 0.25\ Yd}$$

$$\mathrm{S = -500 + 0.25\ (Y - 100)}$$

$$\mathrm{S = -500 + 0.25\ Y - 25}$$

$$\mathrm{S = -525 + 0.25\ Y}$$

$$\mathrm{S = -525 + 0.25\ (3300)}$$


$$\mathrm{S = 300}$$

**(02 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education


[பக். 9 ஐப் பார்க்க

(ஈ)




**(04 புள்ளிகள்)**

(iv) பொருளாதாரமொன்றில் நிறைதொழில் வெளியீட்டு மட்டத்தை பேணுவதற்குத் தேவையான மொத்தக் கேள்வி நிலையொன்று காணப்படாத சந்தர்ப்பத்தில் பொருளாதாரம் குறைதொழில் மட்ட நிலையில் சமநிலையடையலாம்.




**(வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)**

நிறைதொழில் வெளியீட்டு மட்டம் $Y_2$ ஆகும். அம்மட்டத்தில் பேணுவதற்கு $E_2$ மொத்தக் கேள்வி காணப்படல் வேண்டும். பொருளாதாரத்தில் உண்மையாக மொத்தக் கேள்வி $E_1$ மட்டத்தில் காணப்பட்டால் பொருளாதாரம் $Y_1$ வெளியீட்டு மட்டத்தில் சமநிலை அடையும். எனவே பொருளாதாரத்தில் $Y_2 - Y_1$ வேலையின்மை காணப்படும். **(விளக்கத்துக்கு 02 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

6. (i)
- ★ கொடுக்கல் வாங்கல் நோக்கம்
- ★ பாதுகாப்பு நோக்கம்
- ★ உத்தேச நோக்கம்

**(03 புள்ளிகள்)**

(ii) பணம் = பணத்தளம் × பணப்பெருக்கி

**பணத்தளத்தைத் தீர்மானிக்கும் காரணிகள்**

- ★ மத்திய வங்கியில் உள்ள தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அளவு
- ★ மத்தி வங்கி அரசுக்கு வழங்கும் தேறிய கடனின் அளவு
- ★ மத்தி வங்கி வணிக வங்கிகளுக்கு வழங்கும் கடனின் அளவு
- ★ மத்திய வங்கியின் ஏனைய தேறிய சொத்துக்களின் பெறுமதி

**பணப்பெருக்கியைத் தீர்மானிக்கும் காரணிகள்**

- ★ வங்கிமுறைமையில் காணப்படும் மிகை ஒதுக்கின் அளவு
- ★ சட்டரீதியான ஒதுக்குவீதம்
- ★ பொதுமக்கள் புழக்கத்தில் உள்ள பணத்திற்கும் கேள்வி வைப்பிற்கும் இடையிலான விகிதாசாரம்

**(03 புள்ளிகள்)**

[பக். 10 ஐப் பார்க்க

(iii) (அ) மிகை ஒதுக்கு = உண்மையான ஒதுக்கு − சட்டரீதியான ஒதுக்கு

$$= 250 - (20000 \times \frac{10}{100})$$

$$= 250 - 200$$

$$= 50$$

புதிதாக வழங்கக் கூடிய கடனின் அளவு 50 மி. ரூபா மட்டுமாகும் **(02 புள்ளிகள்)**

(ஆ)

| பொறுப்பு (மில்லியன் ரூபா) | | சொத்து (மில்லியன் ரூபா) | |
|---|---|---|---|
| வைப்பு | 2050 | வைப்பு | 250 |
| | | கடன் | 1800 |
| | 2050 | | 2050 |

**(02 புள்ளிகள்)**

(iv) **மத்திய வங்கியின் குறிக்கோள்கள்** — **மத்திய வங்கியின் தொழிற்பாடுகள்**

- விலை உறுதியும் பொருளாதார உறுதியும்
  - ⋆ நிதிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
  - ⋆ செலாவணிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
  - ⋆ உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கு முகாமை
  - ⋆ புழக்கப்பண வெளியீடு
- நிதித்துறையின் உறுதி
  - ⋆ நிதி நிறுவனத்தினை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்
  - ⋆ இறுதிக் கடன் கொடுப்போனாகக் கருமமாற்றல்
  - ⋆ தீர்ப்பனவு வசதிகளை ஏற்படுத்தல்

**(04 புள்ளிகள்)**

(v) (அ)
- பணவீக்கம் என்பது ஒரு நாட்டின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக நீண்டகாலத்தில் அதிகரித்துச் செல்லும் போக்காகும்.
- ஒரு நாட்டின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடையும் போக்கு பணச் சுருக்கம் எனப்படும்.

**(02 புள்ளிகள்)**

(ஆ)
- கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
- மொத்த விற்பனை விலைச்சுட்டி
- உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி அல்லது உள்ளார்ந்த விலைச் சுட்டெண் **(02 புள்ளிகள்)**

[பக். 11 ஐப் பார்க்க

7. (i) அரச நிதிக்கொள்கையை கேள்வி முகாமைத்துவக் கொள்கையாக நடைமுறைப்படுத்தும்போது நிறைதொழில் வெளியீட்டு மட்டத்தின் பின் மேலும் வெளியீட்டைக் கூட்ட முடியாது என்பதனால் விலை மட்டம் உயருமே தவிர பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. இவ்வாறான வரையறையின்போது மாற்று வழியாக நிரம்பல் பக்க கொள்கையின் அடிப்படையில் அரச நிதியினை இயக்க முடியும்.

உ-ம்: தனியார் மயப்படுத்தல், நெறிப்படுத்தல், ஊழியச் சந்தைப் புணரமைத்தல், மூலதனச் சந்தையை புணரமைத்தல், வரி அமைப்பை மாற்றியமைத்தல் **(04 புள்ளிகள்)**

(ii) வரித் தளம் என்பதனால் கருதப்படுவது வரிக்கு எந்த விடயம் அடிப்படையாகும் என்பதாகும். அதாவது வரியானது எக்காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்படுகின்றது என்பதாகும்.

உ-ம்: வரிக்கு அடிப்படை வருமானம் என்றால், வரி வருமான வரி எ வகைப்படுத்தப்படும்.
வரிக்கு அடிப்படை வெளிநாட்டு வர்த்தகம் என்றால், ஏற்றுமதி வரியாகவும் இறக்குமதி வரி என வகைப்படுததப்படும்.
வரிக்கு அடிப்படை விற்பனை என்றால், விற்பனைப் புறழ்வுவரி என வகைப்படுத்தப்படும்.
**(04 புள்ளிகள்)**

(iii) அரச செலவு இரு பிரதான நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.
- ⋆ பொருளியல் ரீதியில் வகைப்படுத்தல்
- ⋆ செயலாற்றுகை ரீதியில் வகைப்படுத்தல்

பொருளியல் வகைப்படுத்தல்

| நடைமுறைச் செலவு | மூலதனமும் தேறிய கடன் வழங்குலும் |
|---|---|
| • பண்டங்கள் சேவைகள் | • தேறிய சொத்துக்கள் கையாளல் |
| • அரச கடன் வட்டி | • மூலதன மாற்றல்கள் |
| • நடைமுறை மாற்றல்கள் | |

செயலாற்றுகை ரீதியில்

| நடைமுறைச் செலவு | மூலதனச் செலவு |
|---|---|
| • சாதாரண சேவையும் பொதுச் சேவையும் | • சாதாரண பொதுச் சேவை |
| • சமூக சேவை | • சமூக சேவை |
| • பொருளாதாரச் சேவை | • பொருளாதா சேவை |
| • ஏனைய (வட்டிக் கொடுப்பனவு) | |

**(04 புள்ளிகள்)**

(iv) மொத்த நிலுவை = நன்கொடைகளை உள்ளடக்கிய அரச வருமானம் - அரச மொத்தச் செலவு
= 12 000 – 15 000
= – 3 000

தேறிய நிதிப் பற்றாக்குறை = மொத்தப் பாதீட்டுப் பற்றாக்குறை – கடன் மீள் கொடுப்பனவு
= – 3 000 – 1 000
= – 2 000 **(04 புள்ளிகள்)**

(v) அரச கடன் மாற்றம்

| | பில்லியன் ரூபாவில் | அரச கடன் (மொ.உ.உ) % ஆக |
|---|---|---|
| 2011 | 5133 | 78.5 |
| 2012 | 6000 | 79.2 |
| 2013 | 6793 | 78.3 |

முழுமையாக நோக்கும்போது அரச கடனின் அளவு அதிகரித்துள்ளது.

[பக். 12 ஐப் பார்க்க

**அரச கடன் அதிகரிப்பதால் ஏற்படும் விளைவுகள்**

- அரச கடன் சேவை கொடுப்பனவு அதிகரித்தல்.
- அரச வரவு செலவுத்திட்டத்தில் நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறை ஏற்படக் காரணமாதல்
- கடன் பெறுவதன் மூலம் வெளிநாட்டுச் சொத்து நாட்டினுள் வருவதால் நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி உறுதியடைதல்
- நீண்ட காலத்திற்கு கடன் செலுத்தவேண்டியுள்ளதால் சென்மதி நிலுவையில் இடர்பாடுகள் ஏற்படல்
- வங்கிக் கடன்பெறல் பண நிரம்பல் விரிவுக்குக் காரணமாதல்
- உள்நாட்டுச் சந்தையில் அரசு கடன் பெறும்போது பாதகமான விளைவுகள் ஏற்படல்
- வட்டி வீதம் உயர்வுக்குக் காரணமாகும்.

8. (i) (அ) இரு பண்டங்களைப் பொருத்தும் அவுஸ்திரேலியாவாகும். **(02 புள்ளிகள்)**

(ஆ) பால்மா - அவுஸ்திரேலியா
டின் மீன் - நியுசிலாந்து **(02 புள்ளிகள்)**

(இ) நியுசிலாந்து
பால்மா பக்கட் 1 = டின் மீன் 2
டின் மீன் 1 = பால்மா பக்கட் 0.5 **(02 புள்ளிகள்)**

அவுஸ்திரேலியா
பால்மா பக்கட் 1 = டின் மீன் 0.5
டின் மீன் 1 = பால்மா பக்கட் 2

(ஈ) நியுசிலாந்து 1 டின் மீனை ஏற்றுமதி செய்து 0.5 இற்கும் 2 இற்கும் இடையிலான பால்மாப் பக்கட்டை இறக்குமதி செய்தல் வேண்டும்.
அவுஸ்திரேலியா 1 பால்மாப் பக்கட்டை ஏற்றுமதி செய்து 0.5 இற்கும் 2 இற்கும் இடையிலான அளவு டின் மீனை இறக்குமதி செய்தல் வேண்டும். **(02 புள்ளிகள்)**

(ii) பெயரளவுப் பாதுகாப்பு வீதம் என்பது உள்நாட்டு உற்பத்திக்குப் போட்டியாக உள்ள ஒரு பொருளொன்றின் மீது சுங்க வரி விதிப்பதன் மூலம் இறக்குமதிப் பண்டத்தின் விலை அதிகரிப்பதன் காரணமாக உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கும் பாதுகாப்பை அளவிட்டுக் கூறுவதாகும்.

$$\text{பெயரளவுப் பாதுகாப்பு வீதம்} = \frac{\text{சுங்கவரி விதிக்கப்பட்டதன் பின் உள்நாட்டுப் பண்டத்தின் விலை}}{\text{சுங்க வரி விதிக்கப்பட்டதன் பின் இறக்குமதிப் பண்டத்தின் விலை}} \times 100$$

பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் என்பது சுங்கவரி அறவிட்ட பின் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டப்பட்ட பெறுமதிக்கும் $(V_1)$ சுங்க வரி விதிக்கப்பட முன் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டப்பட்ட பெறுமதிக்கும் $(V_0)$ இடையிலான வித்தியாசத்தை விகிதாசாரமாகக் காட்டுவதாகும்.

$$\text{பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம்} = \frac{V_1 - V_0}{V_0} \times 100$$ **(04 புள்ளிகள்)**

(அ) மூலதனக் கணக்கு வரவு - (மில்லியன்) 150
பண்டக் கணக்கு செலவு) - (மில்லியன்) 150

[பக். 13 ஐப் பார்க்க

(ஆ) சேவைக் கணக்கு வரவு (மில்லியன்) 20
மூலதனக் கணக்கு செலவு (மில்லியன்) 20

(இ) மூலதனக் கணக்கு வரவு (மில்லியன்) 50
ஆரம்ப வருமானக் கணக்கு செலவு (மில்லியன்) 50

(ஈ) மூலதனக் கணக்கு வரவு (மில்லியன்) 30
இடைநிலை வருமானக் கணக்கு செலவு (மில்லியன்) 30

(ஈ) நேரடி முதலீடு மூலதனக் கணக்கு (மில்லியன்) 500
மூலதனக் கணக்கு செலவு (மில்லியன்) 500

**(05 புள்ளிகள்)**

(iv) நிலையான நாணய மாற்று வீதம் என்றால் வெளிநாட்டு நாணய அலகொன்றுக்காக பரிமாற்றப்படும் உள்நாட்டு நாணய அலகுகளின் அளவை நாணய அதிகாரியின் மூலம் தீர்மானிக்கப்பட்ட பின் ஒரே மட்டத்தில் பேணுவதாகும். புரதான தங்க நாணய அளவீட்டு முறை நிலையான நாணயமாற்று வீதமாகும்.

பெயரளவு நாணய மாற்று வீதம் என்றால் வெளிநாட்டு நாணய அலகொன்றுக்கு நிகழும் கேள்வி நிரம்பலின் அடிப்படையில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களுக்கு உட்படும் நாணய மாற்று வீதமாகும்.

**(03 புள்ளிகள்)**

9. (i) **வளங்களின் அளவு**

- புதிய வளக் கண்டுபிடிப்பு
- வெளிநாட்டு முதலீடு உள்வரல்
- மூலதன விரிவாக்கம்
- வெளிநாட்டுப் பயிற்சி பெற்ற ஊழியம் நாட்டுக்குள் பெயர்தல்

**வளங்களின் விளைதிறனில் ஏற்படும் மாற்றம்**

- தொழினுட்ப விருத்தி
- முகாமைத்துவத்தில் ஏற்படும் முன்னேற்றம்
- தேர்ச்சிகள் விருத்தியடைதல்
- தொழிற்பிரிப்பு

**பேரினப் பொருளாதார உறுதி**

- அரசியல் உறுதி
- நல்லாட்சி
- முயற்சியாண்மையின் அபிவிருத்தி

**(05 புள்ளிகள்)**

(ii)
- **அபிவிருத்தி**
  குறிப்பிட்ட ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கான செயற்பாடுகள் அபிவிருத்தி எனப்படும். இது பல்துறை சார்ந்த செயற்பாடாகும். அதாவது, பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் என்ற பல்வேறு துறைகளினூடாகவும் மக்களின் வாழ்க்கை நிலைமையை சாதகமனா திசைக்கு மாற்றியமைக்கும் செயற்பாடாகும்.

- **மானிட அபிவிருத்தி**
  நபர்களின் செயற்பாடுகளும் திறமைகளும் விரிவடையும் வகையில் தெரிவு செய்யும் வசதி வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் செயற்பாடாகும். அதாவது, சமூகத்திலுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சிகரமாகவும் நீண்ட காலம் வாழ்வதற்கு அவசியமான பௌதிக மானிட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய வாய்ப்புக்கள் விரிவடைதல்.
  ஆமார்த்த சென் கூற்றுப்படி மக்களின் உரிமைகளையும் (Entitlements) கொள்ளளவையும் (Capabilities) விரிவுபடுத்தும் செயற்பாடு மானிட அபிவிருத்தியாகும்.

- **நிலைபேறான அபிவிருத்தி**
  எதிர்கால பரம்பரையினரின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய ஆற்றலுக்கு தடைகளை ஏற்படுத்தாத வகையில் தற்கால சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடிகின்றமை நிலைபேறான அபிவிருத்தியாகும். இங்கு மூன்று தோற்றப்பாடுகள் காணப்படும்.

[பக். 14 ஐப் பார்க்க

- ★ பொருளாதார அபிவிருத்தி
- ★ சமூக அபிவிருத்தி
- ★ சூழல் பாதுகாப்பு **(06 புள்ளிகள்)**

(iii) **மொத்த பிறப்பு வீதம் வீழ்ச்சியடைதல்**

- ★ பிள்ளைப் பேற்று வளம் வீழ்ச்சியடைதல்
- ★ குடும்பத் திட்டமிடலும் குடும்பக் கட்டுப்பாடும்
- ★ பெண்களின் வேலைவாய்ப்பில் ஏற்படும் அதிகரிப்பு
- ★ திருமணம் செய்யும் வயதெல்லை அதிகரித்தல்

**தேறிய குடிப்பெயர்வு மறைப்பெறுமானம் பெறல்**

- ★ கல்விக்காக வெளிநாடு செல்லல்
- ★ தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு செல்லல்
- ★ உறவுமுறை தொடர்பாக வெளிநாடு செல்லல்

**பொருளாதாரச் செல்வாக்குகள்**

- ★ சனத்தொகை முதிர்ச்சியடைதல்
- ★ குழந்தைகளின் சனத்தொகை குறைவடைதல்
- ★ தங்கி வாழ்வோர் வீதம் வீழ்ச்சியடைதல்
- ★ குடித்தொகை சார் அனுகூலம் கிடைத்தல்
- ★ அரச சமூகநலச் செலவுகள் குறைவடைதல் **(04 புள்ளிகள்)**

(iv) வருமான வறுமையில் இரு பிரிவுகள் காணப்படுகின்றன.

**முழு வறுமை**

தனி நபரின் அல்லது ஒரு குழுவின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்குப் போதுமான வருமானம் கிடைக்காமை முழு வறுமை எனப்படும். பொருளாதாரக் கொள்கைகளைத் தீர்மானிக்கும் போ முழு வறுமை முக்கிய இடத்தை வகிக்கின்றது. அது பின்வருமாறு அளவிடப்படும்.

1) வறிய குடும்பங்களின் சதவீதம்
2) சனத்தொகை வறுமைச் சுட்டி என்ற அளவீடுகள்

The National e-learning Portal for The General Education

**சார்பு வறுமை**

சமூகத்தில் குறிப்பிட்ட ஒரு சனப் பிரிவினருக்குச் சார்பாக மற்றொரு சனப் பிரிவினரின் பொருளாதார சமூக தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஆற்றல் குறைந்தமட்டத்தில் காணப்படல் சார்பு வறுமை எனப்படும். நாட்டின் நடுநிலை வருமானத்தில் 50% மேல் குறைந்த வருமானம் பெறும் சனத்தொகையை அந்நாட்டின் மொத்த சனத்தொகையின் விகிதாசாரமாக அல்லது நாட்டில் குறைந்த வருமானம் பெறும் 40% குடும்பங்களின் வருமான எல்லையை விட குறைந்த மட்டத்தில் காணப்படும் சனத்தொகையை மொத்த சனத்தொகையின் விகிதாசாரமாகக் காட்டுவதாகும். **(04 புள்ளிகள்)**

தேசிய வறுமை வீதம் குறைந்துள்ள விதம்

| | |
|---|---|
| • 1990 | 26.1 |
| • 1995/ 1998 | 28.8 |
| • 2002 | 22.7 |
| • 2006 / 2007 | 15.2 |
| • 2009 / 2010 | 8.9 |
| • 2012 | 6.7 |

- நாட்டின் மொத்த வறுமை குறைந்துள்ளது.
- எனினும் அதன் பிரதேச வேறுபாடுகள் காணப்படுகின்றன.

[பக். 15 ஐப் பார்க்க

- துறை ரீதியாக

| | 1995/ 1996 | 2012 |
|---|---|---|
| நகரம் | 14 | 2.4 |
| கிராமம் | 30.9 | 7.5 |
| பெருந்தோட்ட | 38.4 | 6.2 |

- கிராமிய பெருந்தோட்டத் துறையில் வறுமையானது இன்னும் தெளிவாகக் காணக்கூடிய மட்டத்தில் உள்ளது. **(04 புள்ளிகள்)**

10. (i) **சமூக பொருளாதார செல்வாக்குகள்**

சனத்தொகை முதிர்வடைதல் பல்வேறு பொருளாதார சமூகத்துறைகளிலும் செல்வாக்குச செலுத்துகின்றது. அவ்வாறு செல்வாக்குச் செலுத்தும் பிரதான துறைகளாக ஊழிய நிரம்பல், மூலதனச் சந்தை, உற்பத்தி, சேமிப்பும் முதலீடும், அரச நிதி, அரச கடன், வருமானம், ஊழியப்படை மற்றும் சுகாதாரத் துறை ஆகியவற்றில் பாதகமான செல்வாக்கைச் செலுத்தும். **(04 புள்ளிகள்)**

**தீர்வுகளும் கொள்கை ரீதியான செயற்பாடுகளும்**

- ⋆ வேலை செய்யக்கூடிய ஆண்டுகளை அதிகரித்தலும் ஓய்வூதியத்தை மறுசீரமைத்தலும்
- ⋆ சுகாதாரத் துறையை முன்னேற்றுதல்
- ⋆ சமூகப் பாதுகாப்பு நலன்கள்
- ⋆ ஊழியச் சந்தை மறுசீரமைப்பு
- ⋆ ஊழிய வினைத்திறன் விருத்திக்கான தொழினுட்பத்தை அறிமுகப்படுத்தல். **(05 புள்ளிகள்)**

(ii) **சந்தர்ப்பங்கள்**

- ⋆ விவசாயத்துறையை விரிவுபடுத்தும் ஆற்றல் காணப்படல் (Agriculture)
- ⋆ மீன்பிடித்துறையை விரிவுபடுத்தும் ஆற்றல் காணப்படல் (Aquaculture)
- ⋆ விலங்குவேளாண்மையை விரிவுபடுத்தும் ஆற்றல் காணப்படல் (Animal Husbundry)
- ⋆ கடல், வான் ஆகிய துறைகளில் முதலீட்டுச் சந்தரப்பங்கள் காணப்படல் (5 Hubs)

**தடைகள்**

- ⋆ உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான குறைபாடுகள்
- ⋆ மின் சக்தி வழங்கல் தொடர்பான குறைபாடுகள்
- ⋆ நிதி வசதிகளில் காணப்படும் வரையறைகளும் அதிக செலவும்
- ⋆ பேரினப் பொருளாதார உறுதியின்மை
- ⋆ ஊழியப் பயன்பாடு தொடர்பான சட்ட விதிகள் (ஊழியச் சந்தையின் கடுந்தன்மை)
- ⋆ உயர்ந்த வரிச்சுமை
- ⋆ நல்லாட்சி அற்றுப்போதல்
- ⋆ கிராமப் பிரதேசங்களில் காணப்படும் போக்குவரத்துப் பிரச்சினைகள்

**(05 புள்ளிகள்)**

(iii) வறுமை 6.7 ஆக குறைந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் இலங்கையின் மொத்த வறுமை வீழ்ச்சியடையச் செய்ய காரணமாக அமைந்தது. அதற்குக் காரணமாக இருந்த கொள்கைகளை பின்வருமாறு காட்டலாம்.

**பேரினப் பொருளாதாரக் கொள்கை**

- பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்
- தெரிவு செய்யும் அடிப்படையில் திறந்த பொருளாதாரத்துக்கு இடமளித்தல்

**துறைசார்ந்த கொள்கை**

- வறியவர்களுக்கு மிகவும் பொருத்தமான பொருளாதாரத் துறையை அபிவிருத்தி செய்தல்

  (உம்: விவசாயம், மனித மூலதன விருத்தி, பெண்கள் வலுவூட்டல்)

**பிரதேச ரீதியான கொள்கைகள்**

- கிராமிய பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல்.
- வருமான மீள் பரம்பல்
- காணிப் பகிர்வு
- கடன் வசதி அளித்தல்

[பக். 16 ஐப் பார்க்க

- மாற்றல் வருமானங்களை வழங்கல்
- கிராமிய பிரதேசத்தில் தகவல் தொழினுட்பத்தை விருத்தி செய்தல். (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் ஊழியம் வெளிநாடுகளுக்கு நகர்வதில் பின்வரும் போக்குகளை அவதானிக்கலாம்.

- பெண் ஊழியர்களில் நகர்வின் சதவீதம் கூடுதலாக உள்ளது.
- நகர்வின் திசையை நோக்கின் பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கே கூடிய நகர்வு காணப்படுகிறது.
- மனைப் பொருளாதாரத்துக்கே கூடிய ஊழிய நகர்வு காணப்படல்.
- ஊழிய நகர்வு இலங்கையின் பொருளாதாரத்துக்கு அனுகூலமான மற்றும் பிரதிகூலமான செல்வாக்குகளை ஏற்படுத்தியுள்ளன.

அனுகூலங்கள் :

- வெளிநாட்டு வருமானம் அதிகரித்துள்ளது.
- சென்மதி நிலுவைப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படல்
- வேலையின்மைப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படல்
- பொருளாதாரத்தில் வறுமைக்கான தீர்வு ஏற்படல்
- வெளிநாட்டுக்குச் சென்றோர் மீண்டும் நாட்டினுள் வந்தபின் முதலீட்டில் ஊக்கம்
- புதிய தொழில் நுட்பம் இலங்கைக்குக் கொண்டுவரப்படல்.

பிரதிகூலங்கள்

- குடும்பங்களுக்குள் பாதுகாப்பின்மை
- பிள்ளைகளுக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்காமை
- வெளிநாடு சென்றவர்களுக்கு ஒழுங்கான பாதுகாப்பு கிடைக்காமை
- உள்நாட்டில் ஊழியப்படை குறைதலும் பயிற்றப்பட்ட ஊழியப் பற்றாக்குறையும்
- மூளைசாலிகள் வெளியேற்றம். (05 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

* * *